**12.05.2026**

DVC.No. 11/2025 சரண்யா க/பெ. கமலக்கண்ணன் PW1

குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்)

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 14 வது பத்தியில் அஜீத் தான் வினோதினியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டதாக சொன்னார்கள் என்றும், அதைத்தான் நான் நம்பியுள்ளேன் எனவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 17 வது பத்தியில் எதிர்மனுதாரர்கள் எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் விவாகரத்து செய்வதற்கு முயற்சி செய்து கொண்டும், வேறு பெண்ணை 1ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்து வைக்க முயற்சி செய்து கொண்டு வருகிறார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 10.09.2024 அன்று எனது பெற்றோர்கள் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டிலிருந்து என்னை அழைத்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அந்த தேதியில் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டிலிருந்து சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் என்னை அடித்து கொடுமைப்படுத்தி வரதட்சணை கேட்டதாக காவல் நிலையத்தில் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அஜீத் மற்றும் வினோதினி மேல் என்னுடைய புகாரிலும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் எந்த ஒரு குற்றச்சாட்டுகளையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வினோதினி குறித்து சொல்லியுள்ளேன். அஜீத் குறித்து எந்த குற்றச்சாட்டும் சொல்லவில்லை. என்னுடைய புகாரிலும், என்னுடைய

பிரமாண வாக்குமூலத்திலும் நான் வினோதினி மீது குற்றச்சாட்டுகளை சொல்லியுள்ளேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் திருச்சியிலுள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் அவர் அந்த நிறுவனத்தின் பெயர், அந்த நிறுவனம் எங்கு அமைந்துள்ளது போன்ற விவரங்களை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் எவ்வளவு வருமானம் பெற்று வருகிறார் என்பது குறித்தும், என்னுடைய புகாரிலும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாட்டர் சுத்திகரிப்பு தொழில் செய்து மாதம் ரூ. 25000/– பெற்று வருகிறார் என சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி நிறுவனம் எங்கு உள்ளது மற்றும் அதுகுறித்த விவரங்களுக்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்சொன்ன விவரத்தை என்னுடைய புகாரிலும், என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு பூர்வீக சொத்து உள்ளதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட நிலையில் அதுகுறித்த விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வட்டிக்கு விட்டு வருமானம் ஈட்டி வருகிறார் என எனது என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட நிலையில் அதுகுறித்த விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் சொத்து விவரங்கள் குறித்து எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் நான் சொல்வது போல் தனியார் நிறுவனத்தில் வேலை செய்யவில்லை

என்றாலும், அவருக்கு பூர்வீக சொத்துகள் எதுவும் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மனுவில் குறிப்பிட்டுள்ள அளவிற்கு சீர்வரிசை பொருட்கள் மற்றும் திருமண செலவு செய்ய எனது பெற்றோருக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தினமும் மது அருந்திவிட்டு ஆபாசமாக திட்டி, எனது முகத்தில் சிகரெட் புகையை விடுவார் என எனது மனுவில் குறிப்பிட்டுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்ட சங்கதிகள் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரக்கு மேற்சொன்ன எந்த பழக்கமும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் பில்லி, சூன்யம் ஆகியவை செய்து வருகிறார் என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எனக்கு மருந்து கொடுத்து என்னை கட்டிப்பிடித்து, முத்தம் கொடுத்து பலாத்காரம் செய்ய முயற்சித்தார் என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சென்னையில் வேலை பார்த்து வந்தேன் என என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சென்னையில் 1ம் எதிர்மனுதாரருடன் அவரது வீட்டில் தான் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. சென்னையில் இருக்கும் போது நான் கர்ப்பமடைந்து அதன் பின்னர் அந்த கரு கலைந்துவிட்டது என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 11ல் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய் என்றால் சரியல்ல. 10.01.2024 அன்று நான் 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் இல்லை என்றால் சரியல்ல. என்னை எதிர்மனுதாரர்கள் 5 பவுன் வாங்கி வர சொல்லி கட்டாயப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் வீட்டில் என்னை தனியாக பூட்டி

வைத்ததாக சொல்வதெல்லாம் கற்பனையான சங்கதிகள் என்றால் சரியல்ல. என்னுடைய நடவடிக்கைகள் சரியில்லாத காரணத்தினால் 1ம்எதிர்மனுதாரர் அதனை சரிசெய்ய பல்வேறு முயற்சிகள் எடுத்தார் என்றாலும், மேலும் என்னுடைய நடவடிக்கை சரியில்லாத காரணத்தினால் தான் 1ம் எதிர்மனுதாரர் என் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் 1ம் எதிர் மனுதாரருக்கு வேறு பெண்ணுடன் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு எனது பெற்றோர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு 5 பவுன் தங்க நகை, 1 பவுன் மோதிரம் ஆகியவை அணிவித்தார்கள் என்றாலும், அந்த நகைகளும் தற்போது என்வசம் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. திருமணத்தின் போது ரொக்கமாக எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும், ஒரு இலட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் தான் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தற்போது RO Water மிஷின் சர்வீஸ் செய்யும் வேலை செய்து வருகிறார் என்றாலும், தற்போது மாதம் ரூ. 15000/- பெற்று வருகிறார் என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் சொந்தமாக  RO Water தொழில் செய்து வருகிறார். மேலும் RO Water மிஷின் சர்வீஸ் செய்யும் வேலையும் செய்து வருகிறார். 1ம் எதிர்மனுதாரருக்கு நான் சொல்வது போல் சொந்தமாக RO Water தொழில் செய்யும் அளவிற்கு வசதியும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ. 15000/- வருமானத்தில் தான் அவரது பெற்றோர்களை கவனித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் எனது நடவடிக்கையை மாற்றிக் கொண்டு வந்தால் 1ம் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 ஆவணம்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.05.12 17:40:20 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி